# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
# அருப்புக்கோட்டை

## அசல் வழக்கு எண்.172/2019

பி.வா.சா.1– குறுக்கு விசாரணை – நாள் 24–03–2026.

பெயர் = ராமமூர்த்தி

பி.வா.சா.–1 நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதிகள் தரப்பில் கு.வி.–

(1) தாவாவழக்கை 1ம் லக்கச்சொத்தைப் பொறுத்து பாண்டியம்மாள் மற்றும் 2ம் லக்கச்சொத்தைப் பொறுத்து ராஜலட்சுமி ஆகியோர் என்மீது தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். வழக்கு நிலுவையில் இருக்கும்போது 1ம் லக்கச்சொத்தைப்பொறுத்து நீதிமன்றத்திற்கு வெளியே நானும் பாண்டியம்மாளும் பேசி முடித்துக்கொண்டோம் என்றால் சரியல்ல. ராஜலட்சுமிக்கும் எனக்கும் எங்கள் வீட்டிற்கும் வடக்கேயும் அவர்களது வீட்டிற்கு தெற்கேயும் உள்ள இடத்திற்கு தான் பிரச்சனை ஏற்பட்டு வழக்கு நடக்கிறது என்றால் சரிதான். 2ம் லக்கச்சொத்தைப் பொறுத்து கொடுக்கப்பட்டுள்ள நான்குமால்கள், சர்வே எண்கள் சரியாக உள்ளது என்றால் எனக்கு தெரியாது. 2ம் லக்கச்சொத்தின் பழைய சர்வே எண்.588 என்றால் தெரியும் புதிய எண்.96 என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் தாவாச்சொத்தை பார்வையிட வரும்போது அங்கு இருந்தேனா என்றால் ஆமாம். ஆணையர் அறிக்கையில் தாவா 2ம் லக்கச்சொத்தின் சர்வே எண்.588/3 என குறிப்பிட்டுள்ளார் என்றால் அது எனக்குத் தெரியாது.

(2) நீதிமன்ற ஆணையர் 2ம் லக்கச்சொத்திற்கு வடக்கேயும், தெற்கேயும் உள்ள வீட்டின் அளவையும், ராஜலட்சுமியின் வீட்டின் அளவையும் குறிப்பிட்டுள்ளார் என்றால் அந்த அளவுகள் சரியல்ல என சாட்சி கூறுகிறார். பி.வா.சா.ஆ.1,2 ல் ராஜலட்சுமியின் கிரைய மனைக்கும் தெற்கு என குறிப்பிட்டு தான் ஆவணம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.3ல் ராஜலட்சுமி என்பவர் கட்டியுள்ள வீட்டிற்கும் தெற்கு என நான்குமால் குறிப்பிட்டு கிரையம் வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். ராஜலட்சுமி வீட்டிற்கும் தெற்கே பூமியில் தாவாச்சந்து நான் பி.வா.சா.ஆ.3ன் மூலம் கிரையம் பெறும்போதே இருந்தது என்றால் சரிதான். தாவாச்சந்தின் கிழமேல் தென்வடல் அளவு தெரியுமா என்றால்

தென்வடல் அளவு 1.1/2 அடி இருக்கும் என சாட்சி கூறுகிறார். அந்த தென்வடல் 1.1/2 அடிக்கும் தெற்கே தான் நான் கிரையம் வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் கிரையம் வாங்கியுள்ள 29.1/2 அடி 2ம்வாதி வீட்டின் தெற்குசுவர் வரை உள்ளது என சாட்சி கூறுகிறார்.

(3) நான் கிரையம் வாங்கிய பி.வா.சா.ஆ.3 ன் முன் பத்திரங்களான பி.வா.சா.ஆ.1,2 ல் கிழமேல் தென்வடல் அளவுகள் குறிப்பிடப்படவில்லை என்றால் எனக்குத் தெரியாது என சாட்சி கூறுகிறார். பி.வா.சா.ஆ.3 பத்திரத்தில் முன்பத்திரமாக பி.வா.சா.ஆ.2 குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.2 பத்திரத்தில் முன்பத்திரமாக பி.வா.சா.ஆ.1 குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 8.5 மீட்டர் என்பது 29.1/2 அடி என்றால் சரிதான். என்னுடைய வீடு 8.5 மீட்டர் அளவில் கட்டடப்பட்டிருப்பதாக ஆணையர் அவரது அறிக்கையில் சொல்லியுள்ளார் என்றால் அது எனக்குத் தெரியாது. 2ம் வாதிக்கு அவருடைய கிரையப்பத்திரத்தின்படி எவ்வளவு அளவு பாத்தியப்பட்டது என எனக்குத் தெரியுமா என்றால் தெரியும் 8.1 மீட்டர் என சாட்சி கூறுகிறார். 8.1 மீட்டர் என்பது 2ம் வாதியின் வீட்டின் தெற்குசுவர் முதல் வடக்குசுவர் வரை இருப்பதாக ஆணையர் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். 8.1 மீட்டர் என்பது 26.1/2 அடி என்றால் சரிதான். ஆணையர் அறிக்கையில் சர்வே எண்.105 ல் கட்டடப்பட்டுள்ள என் வீட்டின் லாப்டில் இருந்து வடக்குபக்கம் சர்வே எண்.96 ஆனது 8.1 மீட்டர் அளவு இருந்தது என சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல தவறாக குறிப்பிட்டுள்ளார் என சாட்சி கூறுகிறார்.

(4) தாவாச்சந்து என்பது பூமியில் 3 அடி உள்ளது. நான் சொல்வதுபோல் 2ம் வாதியின் வீடு 26.1/2 அடி என வைத்துக்கொண்டால் வடக்குப்பக்கம் 1 அடியும், தெற்குப்பக்கம் 1.1/2 அடியும் 2ம் வாதிக்கு உள்ளதா என்றால் கிடையாது என சாட்சி கூறுகிறார். 2ம் வாதி தாவா சொத்தின் தெற்குபக்கம் கழிவுநீர் தூம்பு, ஜன்னல், குடிநீர் இணைப்பு ஆகியவை வைத்துள்ளார் என்றால் நான் இடம் வாங்கும்போது கிடையாது எப்போது வைத்தார்கள் என்று தெரியாது நான் கிரையம் வாங்கிய ஒரு வருடம் கழித்து வைத்துவிட்டார்கள் என சாட்சி கூறுகிறார். அந்த அமைப்புகளை அகற்ற பரிகாரம் கேட்டுள்ளேனா என்றால் இல்லை. வாதிகளிடம் சொன்னேன் அவர்கள் அகற்றுவதாக சொன்னார்கள் என சாட்சி கூறுகிறார். நீதிமன்றம் மூலம் அதனை அகற்ற நான் பரிகாரம் எதுவும் இதுநாள் வரை எடுக்கவில்லை என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடத்தில் ABEF பகுதி முழுவதும் 2ம் வாதிக்கு பாத்தியம் காண்பித்துள்ளார் என்றால் சரிதான் தவறாக

காண்பித்துள்ளார் என சாட்சி கூறுகிறார். எனக்கு பாத்தியமான இடத்தை ABCD என காண்பித்துள்ளார் என்றால் சரிதான் தவறாக காண்பித்துள்ளார் என சாட்சி கூறுகிறார்.

(5) ஆணையர் அறிக்கையில் தவறாக காண்பித்துள்ளார் என ஆட்சேபணை தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆமாம். ஆணையரை மீண்டும் நியமனம் செய்யக்கேட்டு மனு எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 2ம் வாதியின் கிரையம் பெற்ற பிறகு தான் நான் கிரையம் பெற்றேன் என்றால் சரிதான். என்னுடைய பத்திரத்திலும், முன்பத்திரங்களிலும் உள்ள நான்குமால்கள் என்னை கட்டுப்படுத்தும் என்றால் சரிதான். பத்திரப்படி பார்த்தாலும், சர்வேப்படி பார்த்தாலும் தாவாச்சொத்து 2ம் வாதிக்கு பாத்தியப்பட்டது இருந்தாலும் தாவாச்சந்து நானும் பராமரிக்க வேண்டும் என பொதுச்சந்து என பரிகாரம் கேட்டுள்ளார் என்றால் சரியல்ல. வாதி தாவாச்சந்தில் திறந்த வாய்க்கால் போட்டு கழிவுநீர் கடத்துகிறாரா என்றால் ஆமாம். 2ம் வாதி அவ்வாறு கடத்துவதாக ஆணையர் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளாரா என்றால் தெரியாது. என் வீட்டின் வடக்குசுவரின் வடக்கே ஒரு இன்ச் அளவு கூட எனக்கு பாத்தியம் இல்லை என்றால் சரியல்ல. என் முன்பத்திரத்திற்கு விரோதமாக பி.வா.சா.ஆ.3 ஐ காண்பித்து நான் கிரையம் வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல.

(6) புல எண்.96 என் பெயரில் இல்லை என்றால் சரிதான். தாவாச்சொத்து எனக்கு பாத்தியமான தனிச்சொத்து என பரிகாரம் கேட்டு இவ்வழக்கிலோ அல்லது வேறு வழக்கோ தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் தாவாச்சொத்து எனக்கு தனித்துப்பாத்தியம் என குறிப்பிட்டுச்சொல்லவில்லை என்றால் சரியல்ல. பொதுச்சந்தாக தாவாச்சந்தை வைத்திருப்பதில் எனக்கு என்ன ஆட்சேபணை என்றால் தாவாச்சந்து என் தனிப்பட்ட சந்து என்பதால் ஆட்சேபணை செய்கிறேன். தாவாச்சொத்தில் எனக்கு தனித்து அனுபவம் கிடையாது 2ம் வாதிக்கும் எனக்கும் பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

ANANTHAVALLI S

Digitally signed by ANANTHAVALLI S
Date: 2026.03.24 14:22:59 +0530